23rd November 1963]

கஜானுத்துறை

*539 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலனிப்பாரா—

கஜானுக்களுக்கென தனியாக ஒரு துறையை அரசினர் அமைத்ததற்கான காரணங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The question of reorganisation of the Treasuries was under the consideration of the Government for a long time. The Reserve Bank of India, the Public Accounts Committee, the Special Officer for Reorganisation for Government departments and the Pay Commission all recommended on different occasions the separation of the Treasuries from the Revenue Department. With the growth in the volume of transactions in the Treasuries and the growing complexity of Government accounts, the separation of the Treasury from the Revenue Department was considered necessary and desirable and was effected accordingly from 1st April 1962.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, ஸ்டேட் பாங்க் இருக்கிற இடத்திலே கஜானு பக்கத்தில் இல்லை. கஜானுவில் பில் வாங்கினுல் ஸ்டேட் பாங்கில் மாற்ற அரை மைல் அல்லது ஒரு மைல் போகவேண்டியிருக்கிறது. ஸ்டேட் பாங்க் பக்கத்தில் கஜானு இருக்க ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. எம் பக்தவத்சலம்: சர்க்கார் கஜானுக்கள் எங்கெங்கு இருக்கிறது என்பது அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெல்லிக்குப்பம் நகர பஞ்சாயத்து டிஸ்பென்ஸரி

*540 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகர பஞ்சாயத்தில் இருக்கும் டிஸ்பென்ஸரியை அரசாங்கம் எடுத்து நடத்த உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில் எப்போது? இல்லையென்றுல் காரணமென்ன?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM: (a) No.

(b) Under the Madras Panchayats Act 1958, it is the responsibility of the Nellikuppam Panchayat Union to maintain the dispensary.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த நெல்லிக்குப்பத்தில் இருக்கிற ஆஸ்பத்திரியானது ஏறக்குறைய 40,000 மக்களுக்கு வைத்திய வசதி செய்துதரும் நிலையில் இருக்கிறது. பல காலமாக அரசாங்கத்திடம் அதை மேற்கொள்ளவேண்டுமென்று